# நதிகள் இணைப்பின் முன்னோடி காலிங்கராயன்

வாய்க்கால் வழியாக வரலாறு கண்ட தன்னிகரில்லாத தலைவன் காலிங்கராயன். காலிங்கராயன் உருவச்சிலை அமைக்கவும், காலிங்கராயன் அணைப் பகுதியைச் சுற்றுலா மையம் ஆக்கவும் ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கட்கு நம் கொங்கு நண்பர்கள் சங்கம் தன் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.



கி.பி.13 ஆம் நூற்றாண்டில் ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டை அடுத்துள்ள கனகபுரத்தில் கொங்கு வேளாளர் சாத்தந்தை குலத்து நஞ்சைய கவுண்டர் மகனாகப் பிறந்தவர் லிங்கையன். அப்போது கொங்குநாட்டை ஆட்சிபுரிந்த வீரபாண்டியன் படையில் சேர்ந்து, தன் ஆற்றலாலும் மதிநுட்பத்தாலும் தளபதி நிலைக்கு உயர்ந்து வீரபாண்டியனின் அமைச்சனும் ஆனான். மிக உயர்ந்த பட்டமான காலிங்கராயன் பட்டம் பெற்றான். உத்தர மந்திரி எனவும் அழைக்கப்பட்டான். காலிங்கராயன் சொல்லே அரசன் சொல் ஆயிற்று.

வீரபாண்டியன் கொங்குமண்டல நிருவாகியாகக் காலிங்கராயனை நியமித்தார். வெள்ளோடு காலிங்கராயன் தலைமையகம் ஆயிற்று. அப்போது கம்மாளர் உட்பட தாழ்த்தப்பட்ட மக்கள் (தாழ்ந்த அல்ல) ஊருக்குள் செருப்பு அணிந்து வரவும், வீடு கட்டினால் காரை பூசவும், வீட்டில் நடைபெறும் நல்லது கெட்டதுக்கு வாத்தியம் வாசிக்கவும் தடை இருந்தது. காலிங்கராயன் முதல் பணியாக, "தாங்கள் புறப்பட வேண்டும் இடங்கட்குக் கால்களில் பாதரட்சை கோத்துக் கொள்ளவும், வீடுகட்குச் சாந்திட்டுக் கொள்ளவும், நன்மை தீமைக்கு இரட்டைச் சங்கு ஊதிப் பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்ளவும்" என்று ஆணை பிறப்பித்தான். இந்த ஆணையை வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயிலில் தன் பெயரில் கல்வெட்டாகவும் பொறித்தான்.

"எங்கு இந்த உரிமை மறுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் என் கல்வெட்டை வெட்டி உரிமை பெறுக" என்றும் கூறினான். வெள்ளோடு உரிமைக் கல்வெட்டு அந்தியூர், பாரியூர், கரூர், குடிமங்கலம், மொடச்சூர் ஆகிய ஊர்ச் சிவன் கோயிலில் கல்வெட்டாக வெட்டப்பட்டுள்ளது. நெடுநாள் உடைந்து பாழ்பட்டு அணை நிறையும் காலமும் வற்றிக் கிடந்த விதரி அத்திப்பாளையம் நெரூர், விசயமங்கலம், திங்களூர், வெங்கமாங்கூடல், சர்க்கார் பெரியபாளையம் ஆகிய இடங்களில் உள்ள குளங்களைப் பழுது பார்த்து உழவர் உள்ளங்களில் பால் வார்த்தான். விசயமங்கலம் வாகைக் குளத்திற்கு "வீரபாண்டிய பேரேர்" என்று பெயர் வைத்தான்.

காடழித்து நாடாக்கிப் புது ஊர்கள் ஏற்படுத்தி மக்களைக் குடியமர்த்தினான். கோயிலுக்கோ, அரசுக்கோ கொடுக்கும் நெல்லை, "கல் பதர் செத்தை மடி முளை ஈரவாசி" இல்லாமல் தூய நெல்லாகக் கொடுக்க ஆணை பிறப்பித்தான். கொடுக்க வேண்டிய வரியை ஒருவர் கொடுக்காவிட்டால் அதிகாரிகள் அவர் வீடு சென்று "மண்கலம் உடைத்து வெண்கலம் பறிப்பார்கள்". ஆனால் காலிங்கராயன் வெண்கலம் பறிக்குமிடத்து மண்கலம் தந்து வெண்கலம் பறிக்கச் செய்தான்.

மழை பெய்யாமல் நெல் விளையவில்லை ஆனாலும் நெல்லாகக் கொடுக்க வேண்டிய கடமையை நெல்லாகத் தான் கொடுக்க வேண்டும் என்பது பழைய ஆணை. ஆனால் காலிங்கராயன் "குளம் எத்தாத

நாளில் நெல் கொடுக்காமல் புன்செய் தானியம் கொடுக்க'' உத்தரவு பிறப்பித்தான். கருணை வள்ளலாகக் காலிங்கராயன் விளங்கினான்.

வீரபாண்டியனுக்கு முன்பு ஆட்சி புரிந்த கொங்குச் சோழர் காலத்தில் கோயில்களில் பூசை செய்த உவச்சர்கள் நீக்கப்பட்டுச் சோழநாட்டுச் சிவபிராமணர்கள் எல்லாக் கோயிலுக்கும் பூசை செய்யச் செய்தது மட்டுமல்ல, எல்லாக் கோயில் வருமானத்தையும் சிவபிராமணரே முழுமையாகப் பெற்றனர்.

காலிங்கராயன் இனிமேல் கோயில் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு முன்பு பூசை செய்த உவச்சர்கட்குக் கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பித்தான். காலிங்கராயன் செய்த செயற்கரிய செயல் காவிரியோடு பவானி கலக்கும் இடத்தருகே தடுப்பணை கட்டி 56.5 மைல் வாய்க்கால் வெட்டி சாமை விளையும் இடம் எல்லாம் சம்பா விளையச் செய்ததாகும். வாய்க்காலின் கழிவு நீர் ஆவுடையா பாறை என்னும் இடத்தில் நொய்யல் ஆற்றில் கலக்கிறது. பவானியாறு கடல் மட்டம் 534 அடி. ஆவுடையா பாறை கடல்மட்டம் 412 அடி. மைலுக்கு 3.79 அடி நிலம் தாழ்வாக உள்ளது. நேராக வாய்க்கால் வெட்டினால் தண்ணீர் வயலில் பாயாமல் ஒடி நொய்யலில் கலந்து விடும். அதற்காக மேடு கண்ட இடமெல்லாம் வளைத்து வளைத்து வாய்க்காலை வெட்டினான். நேராக அணை– நொய்யல் தூரம் 32 மைல். ஆனால் அந்த 32 மைல் தூரத்தை வாய்க்கால் 56.5 மைல் ஒடிக் கடக்கிறது.

கழிவு தண்ணீரை நொய்யலில் தேக்கி அணை கட்டி கரூர் அமராவதி வரை வாய்க்கால் வெட்ட முயற்சி செய்தான். அணை உடைந்தது. ஒட்டை அணை என்று இப்போது அழைக்கப்படுகிறது. நொய்யலுக்குத் தெற்கே வாய்க்கால் வெட்டிய அடையாளம் இன்னும் உள்ளது. பவானி–நொய்யல்–அமராவதியை இணைக்கத் திட்டம் தீட்டிய காலிங்கராயன் இந்தியாவில் நதிகள் இணைப்பின் முன்னோடியாகத் திகழ்கின்றான். அணைகட்டி வாய்க்கால் வெட்டி முடிக்க 12 ஆண்டுகள் ஆயிற்று. சபதம் கோரி தாடிவளர்த்து வாய்க்கால் வெட்டி முடித்தால்தான் தாடியை எடுப்பது என்று சபதம் செய்திருந்தான். வெற்றிகரமாகப் பணி முடித்து அசதியால் தூங்கி விட்டான் காலிங்கராயன். குடும்ப நாவிதன் தூக்கம் கெடாமல் தாடியை எடுத்துவிட்டான். எழுந்த காலிங்கராயன் தன் நாவி தனைப் பார்த்து "என்ன வேண்டுமோ கேள்'' என்றான். என் பெயர் என்றும் நிலைக்க வேண்டும் என்றான். தான் குடியிருந்த காலிங்கராயன் பாளையத்திற்கு நாவிதன்பாளையம் என்று பெயரிட்டான். முதல் கரை நாவிதன் கரை. முதல் வயல் நாவிதன் வயல்.

இன்று காலிங்கராயன் பாளையம் என்ற பெயர் ஊருக்கு இருந்தாலும், வருவாய்த்துறைப் பெயர் "மேட்டுநாசுவன்பாளையம்'', "அணைநாசுவன்பாளையம்'' என்பதேயாகும். பாண்டு பத்திரம் எழுதப்படுவது நாசுவன்பாளையம் என்ற பெயரிலேயாகும். 1779 முதல் பல வெளிநாட்டுப் பயணிகளும், பொறியாளர்களும் காலிங்கராயன் அணை வாய்க்கால் பணியை புகழ்ந்துள்ளனர். முல்லைப் பெரியாறு அணை கட்டிய பென்னிகுக் 1878 இல் பார்வையிட்டுள்ளார். பல புலவர்கள் தம் தனிப்பாடல்களிலும், இலக்கியங்களிலும் காலிங்கராயன் செயலைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்து பாடியுள்ளனர். இப்போது அரசு அறிவிப்பைப் பாராட்டுகிறோம். இது மட்டும் போதாது. காலிங்கராயனுக்கு மத்திய அரசு நினைவு அஞ்சல் தலை வெளியிட வேண்டும். அவன் நிர்வாகம் செய்த வெள்ளோட்டில் நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும். காலிங்கராயன் பணி முடிவுற்றது கி.பி.1281 தை 5. அன்று அரசு விழா எடுக்க வேண்டும். ஒன்றுபட்டு அக்கோரிக்கைகளை எழுப்புவோம். வெற்றியடைவோம்.

– கட்டுரையாக்கம்

கொங்குமாமணி புலவர் செ.இராசு, ஈரோடு.

❖❖❖❖❖